# <u>சட்டப் பேரவையில் சமூக நீதி பற்றி முதல்வர் கலைஞர் பேசிய சில கருத்துக்கள் – 5.4.2007</u>

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது உரையாற்றிய மாண்புமிகு அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் கலிலூர் ரகுமான் அவர்கள் குறிப்பிட்ட சமூக நீதி பற்றி ஒரு சில கருத்துக்களை இந்தக் குறுக்கீட்டின் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்.

சமூக நீதியின் தாயகமான தமிழகத்தில் 1920ஆம் ஆண்டு நீதிக்கட்சியின் ஆட்சி தோன்றியவுடன் 1921ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 'முதல் கம்யூனல் ஜி.ஓ.' எனப்படும் முதலாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணையில் முஸ்லீம்களும், இந்தியக் கிறித்தவரும் இடம் பெற்றார்கள். அதனைத் தொடர்ந்து அரசு நியமனங்களில் மக்கள் தொகை விகிதாச்சாரப்படி பகிர்ந்து நியமிக்க வேண்டும் என்பதற்காக 1927ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆணையிலும் முகமதியருக்கும், கிறித்துவருக்கும் தனியே இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வகுப்புவாரி விகிதாச்சார விதியோடு வகுப்புவாரி சுழற்சி விதியும் (Quota and Rota) பின்பற்றப்பட்டது. நீதிக்கட்சியின் பாரம்பரியத்தை ஒட்டியே தி.மு.க. ஆட்சியில் 1973–1974ஆம் ஆண்டுகளில் உருது பேசும் லப்பைகள், தெக்கனி முஸ்லிம்கள் ஆகியோர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டார்கள் .

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் தனியே இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அந்த கோரிக்கையை ஏற்று, 2006 சட்டப் பேரவைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்கு தனியாக இட ஒதுக்கீடு வழங்குவதற்கேற்ற அறிவிப்பு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில்,

'தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்துள்ளவாறு – சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்குக் கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் தனியாக இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன்; தமிழகத்திலும் அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு வழிவகுத்திடத் தேவைப்படும் உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்' என்று உறுதி வழங்கப்பட்டது.

இவ்வாறு தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் தெரிவித்ததைச் செயல்படுத்துவதற்கு முதற் கட்டமாக – நீதியரசர் திரு.ஜனார்த்தனன் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் – இப்பொருள் பற்றி விரிவாக விசாரணையும் ஆய்வும் செய்து உரிய பரிந்துரையைத் தருமாறு அரசு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த ஆணையம் சிறுபான்மையினருக்கான இட ஒதுக்கீடு பற்றிய பரிந்துரையை தமிழக அரசுக்கு அளித்துள்ளது.

திரு.ஜெ.அ. அம்பாசங்கர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அறிக்கையில் காணப்படும் இந்துக்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை; கிறித்தவர்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை; முஸ்லிம்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் கிறித்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று அமைந்த அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க, சட்ட ரீதியிலான இந்த பரிந்துரையினை தமிழக அரசு ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்துவரும் 69 சதவீத இட ஒதுக்கீடு சம்பந்தமான வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தின் விசாரணையில் இருந்து வருவதால், அந்த வழக்கு முற்றுப் பெற்று உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகு, சிறுபான்மையினர் இட ஒதுக்கீடு தொடர்பான பரிந்துரையினை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டரீதியான முடிவுகளைத் தமிழக அரசு மேற்கொள்ளும்.

தோழமைக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து அதன் பின்னர் முழு விவரம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *